பிவா.சா.4 மாரிமுத்து – O.S.No.2/2009 05.04.2023

2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –

எனக்கு எழுதப்படிக்க தெரியும். இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது. கி.காளிமுத்து என்னுடைய ஊர்க்காரர் மற்றும் உறவினர். வழக்கு சம்பந்தமாக விபரங்கள் அவர் தான் சொன்னார் என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் வழக்கறிஞர் சொல்லி தான் தெரியும் என்றால் சரியல்ல நேரடியாக தெரியும். வாதிகள் இருவரும் 1ம் பிரதிவாதியின் மகன்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி என்ன கட்சி செய்கிறார் என்று எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்தம் செய்வதற்கு 3 நாட்களுக்கு முன்பாக 1, 3 பிரதிவாதிகள் கிரையம் செய்வது சம்பந்தமாக பேசிகொண்டார்கள். அவ்வாறு பேசி கொண்ட போது அவர்களுடன் நான் இல்லை என்றால் சரிதான். நான் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு தொடர்ச்சியாக சாட்சி கையெழுத்து போட செல்வேன் என்றால் சரியல்ல. கிரைய உடன்படிக்கை ஆவணம் எழுதிய பத்திரம் தயார் செய்யும் அலுவலகம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு மேற்கு பக்கம் உள்ளது. பத்திரத்தை வெங்கட்ரமணன் என்பவர் தட்டச்சு செய்து கொடுத்தார். அவர் தான் அந்த ஆவணத்தை தயார் செய்தார் என்பதற்கு குறிப்பு எதுவும் அந்த கிரைய ஒப்பந்த ஆவணத்தில் சொல்லபடவில்லை என்றால் சரிதான். பிவாசாஆ15 ஆவணம் தட்டச்சு செய்து எடுத்து வரப்பட்டு வீட்டில் வைத்து கையெழுத்து போட்டுக்கொண்டோம் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ளவாறு எந்த ஒரு கிரைய முன்தொகையும் கைமாறவில்லை என்றால் சரியல்ல. அந்த கிரைய ஒப்பந்தத்தில் என்னென்ன சரத்துக்கள் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. கிரைய தேதிக்குள் கிரையம் செய்து முடிக்கவில்லை என்றால் செலுத்திய முன் தொகை பணம் இழக்க நேரிடும் என்றால் சரிதான். தாவா சொத்து பூர்விக சொத்து என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி தான் தற்போது தாவா சொத்தில் ஸ்வாதிணத்தில் இருந்து விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி எவ்வளவு காலமாக அனுபவத்தில் இருக்கிறார் என்றும் அதற்காக அவர் எவ்வளவு தொகை செலுத்தி வருகிறார் என்றும் எனக்கு

தெரியாது. பிவாசாஆ15 ஆவணம் தயார் செய்யப்பட்ட முத்திரை தாள் 11.04.2008 என்றால் சரிதான். அதை எழுதியது 3 நாள் கழித்து தான் என்றால் சரிதான். நான் சொல்வது எந்த ஒரு கிரைய ஒப்பந்தமும் 1ம் பிரதிவாதிக்கும் 3ம் பிரதிவாதிக்கும் ஏற்படவில்லை என்றாலும் ஏற்கனவே 1ம் பிரதிவாதி 2 பிரதிவாதிக்கு ஏற்படுத்திக்கொடுத்த கிரைய ஒப்பந்தத்தை தெரிந்து கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட போலியான கிரைய ஒப்பந்தம் தான் பிவாசாஆ15 என்றால் சரியல்ல. அவர் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

(வாதி தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).